## 5. புலம் பெயாந்த தமிழர்களாகிய நாம் போராட்டத்தின் புதிய கட்டத்திற்கு எம்மை ஒன்று படுத்தி பெலப் படுத்துவோம்

கடந்த ஆயுதமும் அரசியலும் கலந்த போராட்ட கட்டத்திலிருந்து அரசியல் போராட்டத்திற்கும், அதுவும் சர்வதேச அரங்கில் நடபெறவிருக்கும் கட்டத்திற்கு மாறிச் செல்லும் பொழுது, போராட்டத்தின் திசையும் நோக்கமும் மாறாது அல்லது பலவீனமடையாதிருப்பதை பாதுகாக்க நாம் விழிப்பாயும கவனமாயும் இருக்க வேண்டும். கடந்த கட்டத்தில் ஆயிரமாயிரம் போராளிகள் பொதுமக்களின அர்ப்பணிப்புகள் தற்கொடைகளினாலும் விடுதலைப் புலிகளின் தளராத தலைமைத்துவத்தினாலும் விடுதலை போராட்டத்தின் இலட்சியமும் திசையும் அசைக்க முடியாத முறையில் பெலப்படுத்தப் பட்டிருக்கின்றது. திரும்பவோ திருப்பவோ முடியாத முறையில் தெளிவும் உறுதியும் அடைந்திருக்கிறது. இதற்காகவே தேசியத் தலைவர் தமது வருடாந்த மாவீரர் தின உரையில் எமது விடுதலைத் தாகத்தையும் இலட்சிய உறுதியையும் திசையையும் பற்றியும் பேசும் பொழுது அடிக்கடி கூறினார் “*எமது போரட்டத்தின் மிகப் பலம் வாய்ந்த ஆயுதம் நம் கரங்கள் தாங்கும் போர்க்கருவிகளல்ல, நம் உள்ளத்தே ஆழமாக வேரூன்றியிருக்கும் உறுதியும் நம்பிக்கையுமே*” எனவே எமது நீண்ட போராட்டத்தின் ஒரு பகுதியான போர் ஓர் நாளைக்கு முடிவு பெறும் என்பதும் அதைத் தொடர்ந்து அரசியல் போராட்டம் வேறு வழிகளில் தொடர வேண்டுமென்பதையும் அவர் சந்தேகமற்ற தூரப் பார்வையில் கொண்டிருந்தார்.

## 6. புதிய கட்டத்தில் நாம் சந்திக்கும் சவால்களும் பிரச்சினைகளும்

புதிய கட்டமொன்றிற்கு மாறிப் போகவேண்டுமென்று நாம் முன்கூட்டியே பார்வை கொண்டிருப்பினும், வெட்கத்துக்குரிய முறையில் வல்லரசுகளும் சர்வதேசமும் இலங்கை அரசுடன் கைகோர்த்து நடாத்திய சதித் திட்டங்களும் அதன் விளைவாக நடந்தேறிய வன்னிக் கொடூர அவலங்களும் எம்மை சடுதியாகவும் எதிர்பாராத வகையிலும் சொல்லொணாத் துயரத்துக்கும் புதிய கட்டத்துக்குள்ளும் தள்ளியிருக்கின்றன. புதிய அரசியல் போராட்டக் கட்டத்தில் நாங்கள் ஆயுதப் போரை நடாத்துவதற்கல்ல ஆனால் எமது நம்பிக்கை உறுதி இவைகளை அடித்தளமாகக் கொண்ட விவாதங்கள் சந்திப்புகள் மாபெரும் ஆர்பாட்டங்களை நாட்டு ரீதியிலும் சர்வ தேச ரீதியிலும் நடாத்துவதற்கு அழைக்கப் படுகின்றோம்.

போராட்டத்தின் புதிய கட்டத்தில் நாம் புதிய சவால்களையும் பிரச்சினைகளையும் சந்திப்போமென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். ஆனால் அவைகளை ஏற்ற முறையில் சந்திக்க முகங் கொடுக்க வேண்டுமாயின் நாம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட வைத்திருப்பவைகளை பலத்தில் திரட்டிக் கொண்டு வருங்கால நிகழ்வுகளும் சந்தர்ப்பங்களும் கொண்டு வருவதையும் பாவனையில் ஈடுபடுத்த வேண்டும்.

தற்பொழுது முந்தியிருந்தது போல் எமது உறுதியையும் அர்ப்பணிப்பையும் பலப்படுத்தி வழி நடத்த ஓர் தெளிவான வெளிப்படையான தலைமைத்துவம் இல்லை. முன்னர் இந்த தலைமைத்துவம் ஓர் தனிப் பெரும் தலைவரில் ஆள்தன்மை கொணடிருந்த பொழுதிலேயும் அது எப்பொழுதும் இலட்சியத்திற்கு கீழ்படிந்தே செயல் பட்டது. ஆகையால் இன்று அத் தலைமைத்துவத்தை இழந்திருக்கும் நிலையில் நாம் எல்லோரும் இற்ற வரை பெற்றுக்கொண்ட தெளிவு உறுதி ஆர்வம் வீச்சு இவைகளை இழக்காதிருப்பது மிக மிக முக்கியமானதும் இன்றியமையாததுமாகும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் போராட்டத்தின் புதிய கட்ட தலைமைத்துவத்தின் உருவம் சமகால சூழலுக்கும் புதிய சவால்களுக்கும் தேசிய சர்வதேச கட்டாயங்களுக்கும் அமைய மாறலாம். ஆனால் இம் மாற்றங்கள் மத்தியில் நாம் மறக்காதிருக்க வேண்டியது

1. கடந்த 60 ஆண்டுகள் நீடித்திருக்கும் தமிழ் விடுதலைப் போராட்டம், இலங்கை அரச பயங்கரவாதத்திற்கெதிராக விடுதலைப் புலிகள் 30 ஆண்டுகள் நடாத்திய போரிலும் பார்க்க நீளத்திலும் அகலத்திலும் ஆழத்திலும் முக்கியமானது.

2. எமது தலைமைத்துவம் எமது இலட்சியம் எமது நோக்கங்களினாலேயே எப்போதும் தீர்மானிக்கபபட வேண்டும். இலட்சியத்திற்கு பணி செய்யவே தலைமைத்துவம், இதற்கு மாறாக, தலைமைத்துவத்திற்கு பணி செய்ய இலட்சியம் அல்ல. தலைமைத்துவத்திற்கேற்ப எமது விடுதலை வேட்கைகளை மாற்றவோ பலவீனப் படுத்தவோ கைவிடவோ முடியாது. மாறிக் கொண்டிருக்கும் சூழலுக்கேற்ப பணியாளர்கள் தமது அமைப்பு அணிகளை மாற்றிக் கொண்டு போராட்டத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

3. நீண்ட போராட்டத்தினாலும் போர்ப் பலிகளினாலும் பலப் படுத்தப் பட்ட இலட்சியங்கள் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் சுதந்திரமாக மக்களின் சொந்த இலட்சியங்களாக முன் எடுத்துச் செல்லப் பட வேண்டும். விடுதலைப் புலிகளின் இயக்கம் நமது சில நாடுகளில் இன்னும் தடை செய்யப் பட்டதாக இருப்பதின் காரணமாக, எமது முயற்சிகள், ஏதோ மறைவாகச் செயல் படும் இயக்கத்தின் செயல்களாக அல்ல எமது சொந்த முயற்சிகளாகவே உரிய பொறுப்புடன் முன் எடுத்துச் செல்லப் பட வேண்டும்.

## 7. எமக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலை விரைவில் மாற வேண்டும்

துரதிஸ்டவசமாக வன்னி அவலங்கள் மத்தியில் இறுதி நாட்களில் நடந்தேறிய நிகழ்வுகளின் தெளிவின்மை காரணமாக எம் மத்தியில் ஒரு வித சந்தேகங்கள் குழப்பங்கள் தோன்றி எமது பார்வையை மழுங்கடித்து புதிய கட்டப் போராட்டத்திற்கு இன்றியமையாத தேவையாயிரக்கும் ஒற்றுமையை பாதித்திருக்கிறது. இந் நிலை மிகக் கெதியாக மாற வேண்டும் இன்றேல் இன்னும் எமது இனத்தின் அவல நிலையை மிக மோசமான வகையில் பாதிக்கும். ஒற்றுமையுடன் தான் இலங்கையில் வாழத்துடிக்கும் எமது உடன்பிறப்புக்களை காப்பாற்ற முயற்சிகள் செய்ய முடியும். ஒற்றுமையுடன் தான் எமது போரட்டத்தை எமது தேசிய ரீதியிலும் சர்வ தேச ரீதியிலும் விறு விறுபாக வீச்சுடன் முன்னெடுக்கலாம். எமக்குள் தோன்றியிருக்கும் எவ்வித பிளவுகளையும் எமது எதிரிகள் எமது போராட்டத்தை நிறுத்த அல்லது பலவீனப் படுத்த பயன்படுத்துகின்றனர். ஆகையினால் புலிகளின் தலைமைத்துவத்தில் ஆயிரமாயிரம் போராளிகள் மற்றும் சாதாரண மக்களின் உயிர்ப் பலியினால் பலப்படுத்தப் பட்ட போராட்டத்தையும் நோக்கங்களையும் எமது துரோகச் செயல்களால் காட்டிக் கொடுக்காது செயல் படுவோம். விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் சார்பில் முன் வைத்த இலட்சியங்களை கைவிடுவது என்ற பேச்சிற்கு இடமில்லை. அவ்விலட்சியங்களை எங்களுடையதாக முழுப் பொறுப்புடன் முன் எடுத்துச் செல்வோம்.

## 8. புதிய சூழலின் சில சிறப்பியல்புகள்- விரக்தி அல்ல, வீரமே வெற்றிதரும்!

ஒரு சில நமது இயலாத் தன்மையையிட்டு நம்மை விரக்தியின் எல்லைக்கு தள்ளுகின்றன. வேறு சில எமக்கு நம்பிக்கையூட்டி எமக்கு சாதகமாக மாறி வரும் நிகழ்வுகளை காரணங்காட்டி எம்மை செயலுக்கு ஊக்குவிக்கின்றன.

எமக்கு தலைமைத்துவ மையமாக விளங்கிய வன்னியின் வீழ்ச்சி, முகாம்களில் வாழத் துடிக்கும் எமது மக்களின் பரிதாப நிலை, எமக்குள் தோன்றியிருக்கும் பிரிவினைகள் எம்மை விரக்தியின் எல்லைக்கு தள்ளும்.

ஆனால் வெளி நாடுகளிலும் சர்வ தேச ரீதியிலும் அரசாங்கங்களும் ஊடகங்களும் ஈழத் தமிழரையும் அவர்கள் பிரச்சினையும் சரியாகப் புரிந்து கொள்ளாததாலும், தங்கள் சுய நலனுக்கே முன் உரிமை கொடுத்ததினாலும், தமிழர்கள் பயங்கரவாதிகள் என்று கூறி இலங்கை அரசாங்கத்திற்கு பணத்தையும் ஆயுதத்தையும் ஏராளமாக உதவி எம் நாட்டையும் மக்களையும் எமது தலைவர்களையும் அளித்தனர். இன்று இலங்கை அரசின் அரக்கத்தனத்தையும் கொடிய மனித உரிமை மீறல்களையும்

காணத்தொடங்கி இருக்கின்றனர். இம் மாற்றங்களை எமது வருங்கால போராட்டத்திற்கு சாதகமாகப் பாவித்து, போராட்டத்தை முன் எடுத்துச் செல்ல எமக்கு வாய்ப்பு தோன்றியுள்ளது.

ஆகையினால் விரக்திக்கும் இயலாத்தன்மைக்கும் இடங் கொடாது நம்பிக்கையை இளக்காது புதிய சந்தர்ப்பங்களையும் திறமைகளையும் பாவித்து முன்னேறுவதிலேயே நமது வெற்றி தோன்றும்.

### 9. புதிய கட்டத்தில் எம்மை புதிதாக ஒழுங்கு படுத்திக் கொள்ளுவோம்

போராட்டத்தின் கடந்த கட்டத்தில் அரசியலும் ஆயுதமும் கலந்த தலைமைத்துவம் தனித்துவமானது இன்னோர் முறை செயல் படுத்த முடியாதது. (இதைப் பற்றி எனது "***Agonies and Aspirations of the Tamil Struggle***" என்ற ஆங்கில ஏடு 7ம் அத். பார்க்க) இறுதி கட்ட போராட்டம் தீவில் மட்டும் இடம் பெற்றது, போரிடும் இரு குழுக்களின் பலவீனத்திலும் வலிமையிலும் தங்கியிருந்தது. அத்துடன் சர்வதேச புலம்பெயர் மக்களின் நெருக்குவாரங்களுக்கும் அகப்பட்டிருந்தது. ஆனால் புதிய கட்டத்தில ஒரு பக்கம் துன்பியல் வடுக்களை சுமந்து அடிமையாகி தீவில் மௌனமாக்கப்பட்ட தமிழ்மக்களை கெண்டது. ஆனால் மறு பக்கத்தில் சர்வதேசத்திற்கு முன்னால் துணிவுடன் குரல் கொடுக்கும் புலம்பெயர் மக்கள். ஆகையால் புலிகளின் தலைமைத்துவத்தில் உறுதியுடன் இறுகிப் பிடித்த கொள்கைகளையும் அதன் புலிக் கொடி, கார்த்திகைப் பூ போன்ற அடயாளங்களையும் தொடர்ந்து பாவிப்போம்

### 10. எமது விடுதலைப் போராட்டம் மக்கள ்மயமாக்கப் பட்டுவிட்டது என்பதை உள் வாங்குவோம்.

கடைசிக் கட்டத்தில் எமது போராட்டத்தில் தோன்றிய ஒரு மிக முக்கிய மாற்றம் என்னவென்றால் அது மக்கள் மயமாக்கப் பட்டமை. ஆயுதமேந்திய அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் மாத்திரம் அல்லாது எல்லா தமிழ் மக்களும் இப் போராட்டத்தை தமதாகக் கணித்து அதனுடன் தங்களை இணைத்துக் கொண்டனர். இலங்கத் தீவிற்குள்ளேயும் வெளியேயும் உள்ள ஈழத் தமிழர்கள் விடுதலை வேட்கையினதும் போராட்டத்தினதும் ஆவியினால் பீடிக்கப் பட்டவர்களாக மாறியிருக்கின்றனர். அவர்கள் தம்மை விலக்கப் பட்ட ஒரு இயக்கத்தை சேர்ந்தவர்களாகவல்ல எங்கு வாழந்தாலும் ஈழத் தமிழர்களாக தமது கொடிகளுடனும் அடயாளங்களுடனும் திரண்டு நடை போட்டனர். "தமிழரின் தாகம் தமிழ் ஈழத் தாயகம்" என்று ஒலிக்க தயங்கவில்லை. இவ்வாறு தொடக்கத்தில் விடுதலைப் புலிகளுக்கு சொந்தமானவைகள் – கோசங்கள், பாட்டுகள், அடயாளங்கள் கொடிகள் மக்கள் சொத்தாகிவிட்டன. இவைகளை மாற்றுவதினால் புலம் பெயர் தமிழர்களை பற்றிய சர்வதேச அபிப்பிராயத்தை அல்லது கணிப்பை மாற்ற முடியாது.

ஈழத் தமிழ் மக்களின் ஆன்மாவைப் பீடித்திருக்கும் இலட்சிய நோக்கு அதன் அடயாளங்கள் அனைத்தும் அவர்களின் ஆர்வத்தை அதிகரித்து போராட்டத்திற்கு உந்து சக்தி கொடுக்கும்.

### 11. புதிய கட்டத்தின் அரசில் பணிகளுக்காக எமது அமைப்புகளை பொருத்தமாக ஒழுங்கு படுத்துவோம்.

அந்நிய அரசாங்கங்களுடனும் சர்வ தேச அமைப்புகளுடனும் நாம் அரசியல் பணியில் ஈடு படும் பொழுது நாம் கொடிகளையும் அடையாளங்களையும் தூகãகிச் சென்றால் போதாது. அந்தந்த நாட்டு ஜனநாயக முறைப்படிக்குட்பட ஏற்படுத்தப் பட்ட மக்கள் பேரவைகள் சார்பாக தெளிவான கேரிக்கைகள் திடமான விவாதங்கள் போன்றவை மிக முக்கியம்.

இன்னும் எங்களுக்குள்ளே இரண்டு முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

1. முதியோருக்கும் இளையோருக்கும் அல்லது முன்பு அதிகாரத்துடன் முழுமையாகப் பணியாற்றியவர்களுக்கும் போராட்ட ஆதரவாளர்களுக்கம் இருக்கும் இடைவெளிகள் கரந்துரையாடல்கள் மூலமாக விரைவில் குறைக்கப்பட வேண்டும்.
2. புதிய நிலைமைக்கேற்ப பணகளைப் பகிர்ந்து கொள்ளுதல் அவசியம். இற்ற வரை அனேகமான பணிகள் பொறுப்பாளர்களின் தனித் தலைமைத்துவத்தின் கீழ் எம்மவருக்குள் தமிழில் நடாத்தப் பட்டது. ஆனால் இப்போது கூட்டுத் தலைமைத்துவத்தின் கீழ் வெளி ஆர்ப்பாட்டங்கள் மாத்திரமல்ல அந்நிய மொழிகளில் ராஜதந்திர வேலைகள் பல புரிய அழைக்கப்படுகிறோம்.

ராஜபைக்ச சகோதரரின் சர்வதிகார தலைமைத்துவத்தில் இலங்கை அரசாங்கம் எமது அடிப்படையான மனித உரிமைகளையெல்லாம் மீறி, பயங்கரவாதத்திற்கெதிரான போரென்ற போர்வையில் நிதியையும் ஆயுதத்தையும் பெருமளவில் திரட்டி எமது போராட்டத்தின் கடந்த தலைமைத்துவத்தை அளித்ததையும் தீவிற்குள் தமிழ் மக்கள் அழிந்து அவலப் படுவதையும் உலகம் பார்த்து நிற்கின்றது. அரச பயங்கரவாதம் தான் ஈன்றெடுத்த இயக்கத்தை மீளவும் அளித்திருக்கிறது. ஆனால் 60 ஆண்டுகளுக்கு முன் உண்மை நீதி அடிப்படையில் ஊற்றெடுத்த தமிழ் போராட்டம் தாகத்தில் தணியாது வீரத்திலும் வேகத்திலும் குறையாது புதிய வழிகளில் நிச்சயம் முன்னேறும்.